DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.87/2019**

அ.சா.7

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சண்முகநாதன் | Caste: | |
| Father's Name: | பாண்டி | Calling: | விவசாயம் |
| Village: | மூவலூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 60 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.08.2025

( 1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் பரமக்குடி தாலுகா மூவலூர் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த வளத்தியப்பன் மகன் கிருஷ்ணனை தெரியும். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என் கையெழுத்துதான். முதல் கையெழுத்து யாருடையது என்றால் கிருஷ்ணன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அந்த கையெழுத்துக்களை எதற்காக எங்கு வைத்து போட்டேன் என்றால் நான் நயினார்கோவில் காவல்நிலையத்திற்கு கிராம வேலைக்காக 19.01.2019 ம் தேதி சென்றபோது டிஎஸ்பி நீங்கள் மூவலூர் கிராமத்தை சேர்ந்தவர் தானா என்று கேட்டார். ஆமாம் என்று சொன்னபோது கையெழுத்து போடும்படி சொன்னார். போட்டேன். என் முன்னிலையில் போலிசார் எதுவும் கைப்பற்றவில்லை.

விசாரிக்கவில்லை. அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையெழுத்து மட்டும் முறையே **அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4.**

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 19.01.2019ம் தேதி காலை 8.15 மணியளவில் நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த வளத்தியப்பன் மகன் கிருஷ்ணனும் சொந்த வேலையாக நயினார்கோவில் வந்துவிட்டு எங்கள் ஊருக்கு திரும்புவதற்காக நயினார்கோவில் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தபோது எங்கள் ஊரைச் சேர்ந்த நாகு மகன் பிரபுவை அடித்த காளேஷ்வரன் என்பவரை எங்கள் முன்னிலையில் பரமக்குடி காவல்துணைக் கண்காணிப்பாளர் கைது செய்து விசாரித்தார் என்றும் அப்போது காளேஷ்வரன் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் டிஎஸ்பி பதிவு செய்து என்னிடமும் எங்கள் ஊரைச் சேர்ந்த கிருஷ்ணனிடமும் கையெழுத்து வாங்கினார் என்றும் பின்பு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள படி பிரபுவை குத்தி காயப்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னதன்பேரில் காளேஷ்வரனை அவரது வீட்டிற்கு அழைத்து சென்றபோது அவர் வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் செய்தார் என்றும் எங்கள் முன்னிலையில் டிஎஸ்பி அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும் அப்போது நேரம் 9.15 மணி இருக்கும் என்றும், அந்த அத்தாட்சியில் நானும் கிருஷ்ணனும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும் சொல்லிவிட்டு

**தற்போது எதிரிகளும் நானும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டு உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

**இல்லை**

Sd/-C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)